FWC

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**

**2nd Term Examination - 2021**

| | | | | |
|---|---|---|---|---|
| **இந்து நாகரிகம்** Hindu Culture | **Three Hours 10 min** / **Gr -12 (2022)** | **46** | **T** | **I,II** |

## பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. சிந்துநதிபாயும் பகுதியானது புதைபொருள் ஆய்வாளர்களால் அகழ்வாராட்சிக்கு உட்படுத்தப்பட்ட காலப் பகுதி.
    1) கி.பி 1900 – கி.பி 1930   2) கி.பி 1922 – கி.பி 1928
    3) கி.பி 1922 – கி.பி 1930   4) கி.பி 1920 – கி.பி 1930
    5) கி.பி – 1930 – கி.பி. 1932

02. செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்ட வேதம்.
    1) இருக்கு வேதம்   2) யசுர்வேதம்   3) சாமவேதம்
    4) அதர்வவேதம்   5) வைணவ ஆகமங்கள்

03. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரங்களைக் கொண்டமைந்த பகுதி.
    1) பௌஷ்டி கானி   2) பேசஜானி   3) அபிசாரணி
    4) ஸ்திரிகர்மாணி   5) இராஜகர்மாணி

04. வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் இணைவுறும் நூல்.
    1) புராணங்கள்   2) இராமாயணம்   3) மகாபாரதம்
    4) தர்மசாஸ்திரம்   5) சிவாகமங்கள்

05. அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் என்பன பற்றிக் குறிப்பிடும் பருவம்.
    1) சாந்தி பருவம்   2) வீஷ்ம பருவம்   3) துரோண பருவம்
    4) வன பருவம்   5) அனுசாசன பருவம்

06. பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக்கூறும் சங்க இலக்கியம்.
    1) தொல்காப்பியம்   2) புறநானூறு   3) அகநானூறு
    4) திருமுருகாற்றுப்படை   5) பரிபாடல்

07. "திருமுடியில் உருத்திராட்சத்திலான மகா சிவலிங்கத்தை பதித்தவர்" என அறிஞர்கள் கூறுவது.
    1) முதலாம் நரசிம்மபல்லவன்   2) மகேந்திரவர்மன்   3) பரமேசுவரவர்மன்
    4) இராஜசிம்மன்   5) நந்திவர்மன்

08. சைவசித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்ற காலப்பகுதி.
    1) சங்ககாலம்   2) சங்க மருவிய காலம்
    2) பல்லவர் காலம்   4) சோழர் காலம்   5) நாயக்கர் காலம்

09. காஞ்சி புராணத்தினைப் பாடியவர் எனப் போற்றப்படுபவர்.
    1) கச்சியப்ப முனிவர்   2) சிவஞானமுனிவர்   3) உமாபதி சிவாச்சாரியார்
    4) நிரம்ப அழகிய தேசிகம்   5) கமலை ஞானப்பிரகாசர்

10. வடநாட்டில் எழுந்த யோகம், ஞானம் என்பவற்றோடு தென்நாட்டில் எழுந்த பக்தி, சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களைப் பாடியவர்.
1) கபீர்தாஸர் 2) துளசிதாஸர் 3) இராமானந்தர்
4) ஸ்ரீசைதன்னியர் 5) மீராபாய்

11. இராஜாராம் மோகன்ராஜ் அவர்களால் பல்வகைப் பிரார்த்தனை வழிபாடுகள் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு.
1) கி.பி. 1816 2) கி.பி. 1817 3) கி.பி 1820
4) கி.பி 1823 5) கி.பி 1825

12. நவீன சீர்திருத்த இயக்கங்களில் தேசிய கல்வி முறையினை நடைமுறைப்படுத்திச் சாதனை படைத்தது.
1) பிரம்ம சமாஜம் 2) ஆரிய சமாஜம் 3) இராமகிருஷ்ணமிஷன்
4) விவேகானந்த சபை 5) பிரார்த்தனை சமாஜம்

13. இலங்கையில் இராஜேந்திரன் காலத்தில் புகழ்பெற்ற 'பண்டித சோழேஸ்வரம்' பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு.
1) குருநாகல் சோழேஸ்வரம் 2) பதவியாக் கல்வெட்டு
3) மெதிரிகிரிய கல்வெட்டு 4) மிகிந்தலைக் கல்வெட்டு 5) நிலாவெளிச்சாசனம்

14. "கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது. அது உயிர்ப் பூட்டுவது உண்மையைக் காட்டுவது. தன்னம்பிக்கையைத் தருவது" எனும் கொள்கை உடையவர்.
1) ஞானப்பிரகாசர் 2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 3) காசிவாசி செந்திநாதையர்
4) சுவாமி விபுலானந்தர் 5) விவேகானந்தர்

15. அருணாசலதேசிகருக்கு 'தேசிகமணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஆண்டு.
1) கி.பி. 1888 2) 1920 3) கி.பி. 1940 4) 1950 5) கி.பி. 1952

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>சிம்மவிஷ்ணு | **F**<br>எழுதாமறை | **K**<br>சிக்காகோ மாநாடு | **P**<br>சக்தி பரத்துவம் |
| **B**<br>வேதாந்த சிங்கம் | **G**<br>பிரசங்கம் | **L**<br>சங்கரபக்தன் | **Q**<br>அபௌருஷேயம் |
| **C**<br>பாலபாடம் | **H**<br>பிரதி சர்க்கம் | **M**<br>இலக்கணச் சுருக்கம் | **R**<br>அச்சியந்திரசாலை |
| **D**<br>குப்தர் காலம் | **I**<br>இராமகிருஷ்ணமிஷன் | **N**<br>எழுதாக்கிளவி | **S**<br>1902 |
| **E**<br>சுருதி | **J**<br>நந்திச் சின்னம் | **O**<br>கேது | **T**<br>பெரியதிருக்கற்றளி |

16. வேதங்களைக் குறிக்கும் வேறு பெயர்களைக் கொண்ட தொகுதி யாது?
1) E, F, N, Q 2) D, F, L, Q 3) E, H, M, Q 4) C, I, H, T 5) B, E, H, F

17. புராண காலத்தோடு தொடர்புடைய தொகுதி.
1) C, G, M, S 2) D, H, N, P 3) D, H, O, P 4) A, G, O, T 5) B, G, K, P

18. பல்லவர் கால அரசர்களோடு தொடர்புடைய தொகுதி.
1) D, J, O, T 2) A, J, L, T 3) A, J, O, P 4) E, F, M, S 5) C, G, L, P

19. சுவாமி விவேகானந்தரோடு தொடர்புபடுத்தப்படும் தொகுதி.

1) A, I, L, T 2) D, J, L, S 3) B, J, K, P 4) C, I, O, T 5) B, I, K, S

20. ஈழத்தில் சைவம் வளர்த்த பெரியாரோடு தொடர்புபடும் தொகுதி.

1) A, I, M, S 2) E, J, L, R 3) D, G, L, T 4) C, G, M, R 5) C, I, O, Q

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. இந்து சமயத் திருநூல்களில் ஆகமம்.

1) இறை வழிபாட்டை கிரியைநெறி மூலம் வழிப்படுத்துகின்றன.
2) சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவரது நம்பிக்கை.
3) திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் பிரத்தியட்சப் பிமாணம் முதன்மையான இடம்பெறுகிறது.
4) அனைத்து மக்களும் ஆன்மவிடுதலை பெற வேண்டும் என்ற வகையிலேயே ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
5) சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.

22. சோழ அரசும் சைவநெறியும்.

1) இராஜராஜசோழன் சோழ அரசர்களில் தலை சிறந்தவன்.
2) சோழர் ஆட்சியில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பல கோயில்கள் அமைக்கப்பட்டன.
3) சைவத் திருமுறைகள் தேடித் தொகுக்கப்பட்டன.
4) ஆலயங்களுக்கு அண்மையில் மடங்கள் அமைந்து சமயப் பணி செய்யும் நிலை ஏற்பட்டது.
5) சிவனடியார் குருபூசைகள் இக்காலத்தில் முக்கியத்துவம் பெறவில்லை.

23. வடநாட்டுப் பக்தி நெறியாளர்களில் மீராபாய்.

1) ஆண்டாளுக்கு ஒப்பாக வடநாட்டில் வைணவ பக்தியை வளர்த்தவர்.
2) பிரபக்தி மார்க்கத்தை மதுர பாவனையில் வெளிப்படுத்தியவர்
3) பக்திநெறியில் புதிய மரவைத் தோற்றுவித்தவர்.
4) தாசபோதம் பக்தியை வெளிப்படுத்தும் நூலாகும்.
5) இவரது பாடல்கள் இறை நம்பிக்கையை வளர்ப்பவை.

24. இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பொலனறுவைக் காலம்.

1) பொலனறுவைப் பிரதேசத்தில் 16 இந்துக் கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.
2) தாழிக்குமரன் திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்தான்.
3) நிலாவெளிச் சாசனம் காளி கணத்தவர் அமைத்த காளிகோயில் பற்றியும் அதன் நிர்வாகம் பற்றியும் கூறும்.
4) ஆகம முறைப்படியான பூசைகள், தோத்திர பாராயணம் என்பவற்றுக்கு அரசர்கள் ஒழுங்கு செய்தனர்.
5) இந்து பௌத்த அரசர்கள் கோயில்களுக்கு கொடைகள், தானங்கள் வழங்கினர்.

25. சைவப் புலவர் கா. அருணாசல தேசிகர்.

1) அருணாசலதேசிகரின் சைவசமய நாட்டத்திற்கு குடும்பப் பின்னணி காரணமாக இருந்தது.
2) சைவ மெய்ப்போதகர் எனப் போற்றப்படுபவர்.
3) நற்பிட்டி முனை சைவப் பாடசாலையில் ஆசிரியப் பணியைத் தொடங்கியவர்.
4) வீட்டில் படிக்க வசதி குறைந்த பிள்ளைகளுக்காக இரவுப் பள்ளி நடத்தினார்.
5) 1952ஆம் ஆண்டு ஓய்வு பெறும்வரை தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.

(25x4=100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. இந்து நாகரிகத்தின் முதல்நூல்கள் என்ற வகையில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
    i) வேதங்களின் வகையும் அமைப்பும்
    ii) வேதகால வழிபாட்டு முறை
    iii) தத்துவக் கருத்துக்கள்
    iv) முக்கியத்துவம்

(4+4+6+6=20 புள்ளிகள்)

02. ஆகமங்கள் இந்து சமயத் திருநூல்களில் ஒன்றாகும். இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.
    i) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்
    ii) ஆகமங்களின் சிறப்பு
    iii) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்
    iv) வைணவ ஆகமங்கள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

03. “வடஇந்தியாவில் வைணவ பக்தி நெறியாளர்களின் பங்கு அளப்பரியது” இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை எடுத்தாராய்க.
    i) வடஇந்தியப் பக்திநெறி தோன்றிய காலச்சூழல்
    ii) வடஇந்தியப் பக்தி நெறியாளர்களின் பொதுப்பண்புகள்.
    iii) கபீர்தாஸர் ஆற்றிய பணிகள்
    iv) ஸ்ரீசைதன்னியர்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. சிந்துவெளிக் கால சமய நிலையினை அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சான்றாதாரங் களின் துணை கொண்டு விளக்குக. (20 புள்ளிகள்)

05. நவீன சீர்திருத்த இயக்கங்களில் ஆரிய சமாஜத்தின் பணிகளை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

06. இலங்கையின் இந்துசமய வரலாற்றில் அனுராதபுக் காலம் பெறும் முக்கியத்துவத்தினை பரிசீலிக்குக. (20 புள்ளிகள்)

07. சங்ககால சமயநிலை பற்றி விளக்கி எழுதுக. (20 புள்ளிகள்)

08. “ஈழத்துச் சமயப் பெரியார்களின் வரிசையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகள் அளப்பரியது”. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)